2024 ஜூன் 21] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடுகள்) நீங்கள் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் எழுந்து நிற்கிறேன் அல்லவா! உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருவதற்குத்தானே எழுந்து நிற்கிறேன். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் மாண்புமிகு அவை முன்னவர் பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *ஒரேயொரு நிமிடம். (குறுக்கீடுகள்) நான், உங்களுக்காகத்தான் பேசுகிறேன். நான்* time *கொடுக்கச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)* Time *கொடுக்கச் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தயவுசெய்து உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) உட்கார வேண்டுமல்லவா! (குறுக்கீடுகள்) நீங்கள் உட்கார்ந்தால்தானே வாய்ப்புத் தர முடியும். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்கார்ந்தால்தான் நான் வாய்ப்புத் தர முடியும். (குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த பதாகைகளைக் காட்டினர்.)

இல்லை, இல்லை, நீங்கள் இந்தப் பதாகைகளை எல்லாம் இங்கே காட்டக் கூடாது. நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: Please, *ஒரேயொரு நிமிடம். (குறுக்கீடுகள்)*

3. உறுப்பினர்களை வெளியேற்றுதல் அல்லது பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தப் பதாகைகளைக் காட்டுபவர்கள்மீது நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

(திரு. ஆர்.பி. உதயகுமார், திரு. மா. செந்தில்குமார், முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், திரு. A.K. செல்வராஜ், திரு. S. சேகர் உள்ளிட்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதிக்கு வந்து கோஷமிட்டனர்.)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுமணி அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்)*

(திரு. ஆர்.பி. உதயகுமார், திரு. மா. செந்தில்குமார், முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், திரு. A.K. செல்வராஜ், திரு. S. சேகர் உள்ளிட்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதியில் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டனர்.)

மிரட்டல் எல்லாம் செய்யக் கூடாது. (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் அவரவர்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது வினாக்கள்—விடைகள் நேரம். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள்.

(குறுக்கீடுகள்) அவரவர் இருக்கையில் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–05

நீங்கள் முதலமைச்சராக இருந்தவர். உங்களுக்கு எல்லாம் தெரியும். நீங்கள் தேவையில்லாமல் சபையை, (குறுக்கீடுகள்) சொல்லிவிட்டீர்கள்தானே! (குறுக்கீடுகள்) நீங்கள், அதாவது வினாக்கள்–விடைகள் நேரத்தில், (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லையென்றால் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போதும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள். (குறுக்கீடுகள்) இப்படி சத்தம் போட்டால் எப்படி கேட்கும்? (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர். (குறுக்கீடுகள்)

(திரு. எடப்பாடி K. பழனிசாமி, திரு. மு. சக்ரபாணி, திரு. சு. ரவி, திரு. A.K. செல்வராஜ், திரு. செ. கிருஷ்ணமுரளி, திரு. பொன். ஜெயசீலன் உள்ளிட்ட பல அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதிக்கு வந்து கோஷமிட்டபடி மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கையை முற்றுகையிட்டு கீழே அமர்ந்தனர்.)

இது தவறு. (குறுக்கீடுகள்) இது மிகப் பெரிய குற்றம். (குறுக்கீடுகள்) *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.* (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர், சொல்லுங்கள். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *சார், ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்காகத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், என்ன சொல்கிறார் என்று முதலில் கேட்போம். (குறுக்கீடுகள்) என்ன சொல்கிறார்*

என்று கேட்போம். (குறுக்கீடுகள்) உங்களுக்கு time வாங்கித் தருகிறேன். (குறுக்கீடுகள்) ஏன் கேட்க மாட்டேன் என்கிறீர்கள்? (குறுக்கீடுகள்)

(திரு. எடப்பாடி K. பழனிசாமி உட்பட அனைத்து அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களும் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது, நீங்கள் தேவையில்லாமல் பிரச்சினையைக் கிளப்பாதீர்கள். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) இதில் எந்த நோக்கமும் இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் செய்வது தவறு. (குறுக்கீடுகள்) விதிக்கு புறம்பாகச் செய்கிறீர்கள். நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நான் என்ன சொல்கிறேன் என்றால், (குறுக்கீடுகள்) அவர்கள். . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஆனால், (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

(திரு. எடப்பாடி K. பழனிசாமி உட்பட அனைத்து அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களும் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் இந்த அவைக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கத்தோடு, விதிக்குப் புறம்பாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் இந்த அவையினுடைய ஜனநாயகத்திற்கு விரோதமாக நடப்பதால் உங்கள் அனைவரையும் சட்டமன்றத்தை விட்டு வெளியேற்றுகின்றேன். (கூச்சல்—குழப்பம்)

அவைக் காவலர்கள், அனைவரையும் சட்டமன்றத்தைவிட்டு வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்

இருக்கை அருகே அமர்ந்துகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் சட்டமன்றத்தைவிட்டு வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அனைவரையும் வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) விதிகளுக்குப் புறம்பாக நடக்கின்றீர்கள். நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) இந்தப் பக்கம் வாருங்கள். (குறுக்கீடுகள்) போதும், கிளம்புங்கள். (குறுக்கீடுகள்) போதுமே, கிளம்புங்கள்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

முற்பகல் 10–10

தயவுசெய்து (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் வழிவிடுங்கள். (குறுக்கீடுகள்) இந்த சட்டமன்றத்திற்குள் நீங்கள் யார் பேசுவதும் பதிவு செய்யப்படாது. (குறுக்கீடுகள்) அனைவரும் அமைதியாக வெளியே செல்லும்படி கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட அனைவரையும் வெளியேற்றும்படி அவைக் காவலர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அமைதியாகச் செல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

அவைக் காவலர்கள், அவர்கள் போவதற்கு கொஞ்சம் வழிவிடுங்கள். அவைக் காவலர்கள், (குறுக்கீடுகள்) அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் போகிறார்கள், வழிவிடுங்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் வழிவிடுங்கள். (குறுக்கீடுகள்) யாருடைய வார்த்தைகளும் இங்கே பதிவு செய்யப்படாது. (குறுக்கீடுகள்) ஒளிபரப்பில் அவர்கள் காட்டிய பதாகைகள் எதுவுமே வெளியே காட்சிப்படுத்தக் கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய அனுமதி இல்லாமல், இப்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து, பத்திரிகைகள், ஊடகங்கள் உள்ளிட்ட யாரும், எதையும் வெளிப்படுத்தக்

கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சட்டமன்ற அ.இ.அ.தி.மு. கழக உறுப்பினர்கள், வெளியேற்றப்பட்டிருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் lobby–யிலிருந்து கோஷமிடுவதைத் தவிர்க்க வேண்டும் அல்லது அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று அவைக் காவலர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒரு விரும்பத்தகாத நிகழ்ச்சியை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவரைச் சார்ந்தவர்களும் உருவாக்கியதற்காக இந்த மன்றம் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு சட்டமன்றத்தில் சில நேரங்களில் நடக்க இருக்கிற நிகழ்ச்சிகள் குறித்து பேசுவதற்கு, வாதாடுவதற்கு உரிமை உண்டு. ஆனால், இந்த சட்டமன்றத்திற்கென்று வகுக்கப்பட்டிருக்கிற விதிமுறைகளுக்கு உட்பட்டுதான், யாராக இருந்தாலும் அந்தக் காரியத்தைச் செய்ய முடியும். எடுத்தவுடன், முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரம். கேள்வி நேரம் என்பது மிக முக்கியமானது. அதனால்தான், சட்டமன்ற விதிகளில் யாரும் கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது; கேள்வி–பதிலைத் தவிர வேறு எதையும் பேசக் கூடாது என்று அறுதியிட்டு அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதெல்லாம் அவர்களுக்குத் தெரியாதா என்றால், தெரியும்.

முற்பகல் 10–15

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தவர். அவையை நடத்தியவர். அவரே இந்த நிலைக்கு மாறுபட்டு, இன்றைக்கு நடந்துகொண்டது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவர் அருகிலேதான் முன்னாள் சபாநாயகர் உட்கார்ந்திருக்கிறார். அவருக்கும் இந்த விதி தெரியும். எந்த விவகாரமாக இருந்தாலும் கேள்வி நேரம் முடிந்து, zero hour என்று சொல்லக்கூடிய அந்த நேரத்திலேதான் எழுந்து இந்தப் பிரச்சினைகளை எழுப்ப வேண்டும். நான், சபையை நடத்த வேண்டுமென்பதற்காக,

2024 ஜூன் 21] [திரு. துரைமுருகன்]

அவர்களுக்காக உங்களிடத்தில் ஒன்று சொல்ல வந்தேன். என்ன சொல்கிறார்கள் என்று கேட்டு, கேள்வி நேரத்திலே ஏற்க முடியாது அல்லது விதிக்கு புறம்பானது என்றுகூட நான் சொல்ல முயன்றேன். அதையும் அவர்கள் கேட்கிறமாதிரி இல்லை. எனவே, முதல் நாள் வந்து மன்றத்தினுடைய நிகழ்ச்சியிலே கலந்துகொள்வதைத் தவிர்த்து—இன்றைக்கு கள்ளச்சாராயம் பற்றிப் பேசுவதற்கோ அல்லது ஆட்சியைப் பற்றி பேசுவதற்கோ அவர்களுக்கு உரிமையுண்டு. ஆனால், யாராக இருந்தாலும் விதிகளுக்குட்பட்டுப் பேச வேண்டும். விதிகளுக்குப் புறம்பாக பேச முடியாது. இன்றைக்கு முழுக்க, முழுக்க, இதுவெல்லாம் தெரிந்தவர்கள், அவையில் 12 ஆண்டு காலம் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். எல்லாம் தெரிந்தவர்கள் கேள்வி நேரத்தில் ஆரம்பத்திலே குறுக்கிடுவது தவறு என்று தெரிந்தும், இந்த நிகழ்வினை நடத்தியதற்காக இந்த மன்றம் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. தவிர்க்க முடியாத காரணத்தினால்தான் தாங்கள் இன்றைக்கு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறீர்கள். என்னால் முடிந்த அளவுக்கு அவர்களுக்கு சமாதானம் சொல்ல முயன்றேன். ஆனால், அவர்கள் கேட்பதுமாதிரி இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் சுபாவத்திற்கு மாறாக வெளியே போகின்ற முனைப்போடு அவர்கள் இப்படி நடந்து கொண்டதைக் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன்; வருத்தப்படுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய வார்த்தைகள் கவனத்தில் கொள்ளப்படுவதோடு, மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முன்னாள் முதல்வராக இருந்தவர். அவையின் அலுவலில் முதன்முதலாக வள்ளுவருடைய குறள் வாசித்ததற்குப் பின்பு வினாக்கள்–விடைகள் நேரம் நடைபெறும். அந்த நேரம் முடிந்ததும் zero hour–லே பேசலாம். அதுமட்டுமல்ல; அவர்கள் மட்டுமல்ல, இங்கு எல்லா கட்சிகளைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்புகள் விதி 55–ன்கீழ் தந்திருக்கின்றார்கள். நம்முடைய

அ.இ.அ.தி.மு. கழகத்தைச் சேர்ந்த திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், ஐயா ஓ.பி.எஸ். அவர்கள், திரு. வைத்திலிங்கம் அவர்கள், திரு. அய்யப்பன் அவர்கள் உட்பட அ.இ.அ.தி.மு. கழகத்திலும் பல பேர் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்படவில்லை. மறுக்காதபட்சத்தில், இந்த அவையில் குந்தகம் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பிரச்சினையோ தெரியவில்லை. அவர்கள் இங்கு வந்து இவ்வளவு விவகாரமும் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே முதல்வராக இருந்தவர். ஆகவே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் எதை வேண்டுமானாலும், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசுவதற்கு அவர்களுக்கு நாம் வாய்ப்புக் கொடுக்கிறோம் என்று பலமுறை சொன்னதற்குப் பிறகும் சட்டத்திற்குப் புறம்பாக, விதிக்குப் புறம்பாக சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் பதாகைகளை சட்டமன்றத்திற்குள் கொண்டுவந்து காட்டுவது என்பது சட்டத்திற்குப் புறம்பானது. முதல் நாள் அன்றே அனுமதியில்லாமல் இவ்வாறு அவர்கள் செயல்பட்டது என்பது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போன்று மிக, மிக வருத்தத்திற்குரிய ஒரு விஷயம். இந்தச் சம்பவம் குறித்துப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கின்றது. இந்த அளவில் அவர்கள் இந்த அவையினுடைய மாண்பு மற்றும் ஜனநாயகத்திற்கு விரோதமாக நடந்துகொண்ட காரணத்தினால், நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இன்று ஒரு நாள் மட்டும், அவர்கள் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக் கூடாது என்று வெளியேற்றப்பட்டிருக்கின்றார்கள் என்பதை மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல், அ.இ.அ.தி.மு. கழக உறுப்பினர்கள், பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் பேசிய வார்த்தைகள் எதுவும் அவைக் குறிப்பில் இடம்பெறாது. பத்திரிகைகள், ஊடகங்கள் உட்பட அனைவருமே இந்தக் காட்சிகளையோ அல்லது வார்த்தைகளையோ நான் பேசியது உட்பட அனைத்தையும்